# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 13,905—1964 ජනවාරි 7 වැනි අඟහරුවාදා—1964.1.7**

13,905 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு சனவரி மாதம் 7 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. சி. 383. — உப உணவுப்பொருட்கள்

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

**கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு) அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) பின்னதுவகே ஆதர் சில்வா ஆகிய யான் இக்கட்டளையால் :—

(1) 1963 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ந் திகதியைக் கொண்ட 13,845 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1963 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ந் திகதி வெளியான அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான சி. 382 ம் இலக்கக் கட்டளையை உடனடியாக எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே இறக்குமதியாளர் மொத்த அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை மொத்த அந்தர் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருட்கள் இந்த விலைக்குக் கூடுதலாக கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் விற்றலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக :—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு மொத்த அந்தருக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக, அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் குறிப்பிட்ட பொருளில் சிறு தொகையையும், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில், விலை அட்டைகளில், அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக் கூடியவாறு அக் கொள்கலத்தில் இணைத்து பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம், 2 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற பொருளின் தொகை (நிறையில்) ;

(இ) விற்ற தொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா ?

(8) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1964 ம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ந் திகதியன்று கொழும்பில் பிற்பகல் 12.30 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

பீ. ஏ. சில்வா,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

அட்டவணை

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|
| பத்தி | இறக்குமதியாளரின் அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விலை | மொத்த வியாபாரி ஒருவர் அந்தர் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய மொத்த விலை | சில்லறை வியாபாரி ஒருவர் இருத்தல் ஒன்றை விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| வெங்காயம் (சிக்பெலாப்பூர் சிறு வெங்காயம் தவிர்ந்த ஏனைய எல்லா ரகமும்) .. .. | 26 50 | 27 30 | 0 32 |
| நற்சீரகம் .. .. . | 117 0 | 119 0 | 1 21 |
| கொத்தமல்லி .. . .. | 45 60 | 47 0 | 0 48 |
| முழு உழுந்து .. .. .. | 45 0 | 46 35 | 0 52 |
| பாசிப்பயறு .. .. .. | 42 40 | 43 0 | 0 44 |
| துவரம் பருப்பு .. .. .. | 48 75 | 50 0 | 0 51 |
| கடலைப் பருப்பு .. .. .. | 33 0 | 34 0 | 0 35 |
| சிந்தாமணிக்கடலை .. .. | 37 50 | 40 0 | 0 41 |
| உள்ளி (பம்பாய்) .. .. .. | 44 0 | 46 0 | 0 47 |
| புளி .. .. .. | 39 0 | 42 0 | 0 49 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருட்களை விற்றலாகாது.

(2) இறக்குமதியாளரின் விலை என்பது 10 அந்தரும் அதற்கு மேற்பட்ட எடையையுடைய ஒரு விற்பனையைக் குறிப்பதாகும்.

1—362.

---

1964 ம் ஆண்டின் உணவு விலைக் கட்டளை இலக்கம் : ஜீ. 1.

**ஆட்டிறைச்சி**

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

**சட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவை அதன் 3 (2) ம் உட்பிரிவோடு சேர்த்து வாசிக்குமிடத்து என் மேற் பாரிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு காலி பரிபாலன மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), பியசேன முனிதாச கமலத் செனெவிரத்ன ஆகிய நான், இக்கட்டளையால்—

(1) 1962 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 12 ந் திகதி வெளியான 12,983 ம் இலக்க அதிவிசேஷ இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, 1962 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 5 ந் திகதியைக் கொண்ட, 1962 ம் ஆண்டின் ஜீ. 4 ம் இலக்க எனது விலைக் கட்டளையை இத்திகதியிலிருந்து நீக்கி விடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளிற் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளை, அதே பத்திகளின் தலைப்பில் தரம் பிரித்து விவரிக்கப்பட்டுள்ள ஆட்டிறைச்சியின் ஆகக்கூடிய இருத்தல் விலைகளாக, அதே அட்டவணையின் முதலாவது பத்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள இடப்பரப்பின் எல்லைகட்குள் உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன் ;

(3) இக்கட்டளையின் நோக்கத்துக்காக, " ஆட்டிறைச்சி " என்பது, தலை, குடல் மற்றும் உள்ளடக்கம், குளை, வழுக்கமாகத் தவிர்க்கப்படும் ஏனைய உறுப்புகள், மற்றும் சகலவித கழிவுகளுந் தவிர்ந்த வெள்ளாட்டிறைச்சி அல்லது செம்மறியாட்டிறைச்சி எனப் பொருள்படும் எனக் கட்டளையிடுகிறேன் ;

(4) ஆட்டிறைச்சி எலும்புடன் கூட விற்கப்படுமிடத்து, அவ்வாறு விற்கப்படும் எலும்பின் நிறை விற்கப்படும் ஆட்டிறைச்சியின் மொத்த நிறையின் இருபத்தைந்து சதவிகிதத்திற்கு மேற்படாதிருக்கவேண்டுமென ஆணையிடுகிறேன் ;

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பின் எல்லைகட்குள் இதனோடிருக்கும் அட்டவணையிற் தரம் பிரித்து விவரிக்கப்பட்டுள்ள ஆட்டிறைச்சியை எத்தொகையிலாவது, தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில், எவ்விடத்திலாவது, எவ்வாகனத்திலாவது அல்லது எப்பாத்திரத்திலாவது விற்பனைக்கு வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், இதனோடிருக்கும் அட்டவணையிற் தரம்பிரித்து விவரிக்கப்பட்டுள்ள ஆட்டிறைச்சியின் ஆகக்கூடிய விலைகளை, வாங்குவோர் தெளிவுறக் காணும் பொருட்டு, அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் அல்லது அப்பாத்திரத்திற் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் ;

(6) ஆட்டிறைச்சி கழிவுடன் கூட விற்கப்படுமாயின், அஃது கழிவு தவிர்த்து வேறாக நிறுவை செய்து விற்கப்படவேண்டுமெனக் கட்டளையிடுகிறேன் ;

(7) ஆட்டிறைச்சி விற்பனை செய்யும் ஒவ்வொரு வியாபாரியும், ஆட்டிறைச்சியினை வாங்குவோர் தாம் பெறும் நிறையினைத் தெளிவுறக் கண்காணித்துக் கொள்வதற்கேற்ப வசதியாகத் தம் நிறுவைக் கருவியை வைத்திருக்க வேண்டுமென ஆணையிடுகிறேன் ;

(8) இதனோடிருக்கும் அட்டவணையிற் தரம் பிரித்து விவரிக்கப்பட்டிருக்கும் ஆட்டிறைச்சியினை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டு வழங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி,
(ஆ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சியின் தொகை (நிறையில்),
(இ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சியின் விபரம்,
(ஈ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சிக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(9) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள இடப்பரப்பின் எல்லைகட்குள் எவரும் ஆட்டிறைச்சியினை வேறு எந்த இறைச்சியோ தசையோடு கலந்து விற்றலாகாதெனக் கட்டளையிடுகிறேன் ;

(10) ஆட்டிறைச்சி விற்பனைசெய்யப்படுமிடத்து, இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளிற் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் ஆட்டிறைச்சியினைச் சுற்றிக் கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆணையிடுகிறேன்;

(11) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவ்வாறுபோல் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகக் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1964 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ம் திகதி மு.ப. 9.00 மணிக்கு காலி கச்சேரியிற் கைச்சாத்திடப்பட்டது.

பி. மு. க. செனெவிரத்ன,
காலி பரிபாலன மாவட்ட உதவி
விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

அட்டவணை

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 |
|---|---|---|
| இடப்பரப்பு | எலும்பு அற்ற ஆட்டிறைச்சி இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய விலை | எலும்புடன் கூடிய ஆட்டிறைச்சி இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய விலை |
| | ரூ. ச. | ரூ. ச. |
| காலி பரிபாலன மாவட்டம் .. | 2 50 | 2 10 |

குறிப்பு.—இவ்விலைகள் ஆட்டிறைச்சியை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக ஆட்டிறைச்சியை எவரும் விற்பனை செய்தலாகாது.

1—302

---

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.